Volume 2 Issue 2 February 2021 E-ISSN: 2582-2063

# சோழர்கள் கால வணிகக் குழுக்கள் - ஓர் ஆய்வு

**திருமதி ச. தீபலட்சுமி, M.A., M.Ed., M.Phil.,**
*உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை*
*அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, சேலம்*

**முன்னுரை**

ஒரு நாட்டின் செல்வ வளத்திற்க்கு ஏதுவான தொழில் வாணிகத் தொழிலேயாகும். சோழர்கள் தொண்மை காலம் தொட்டே வணிகத் தொழிலிற் சிறந்து விளங்கினர். இத்தகைய சிறப்பு கொண்ட அவ்வணிகர் பலர் உள்நாட்டிலும் அயல்நாடுகளிலும் முறையே வண்டிகளிலும் மரக்கலங்களிலும் பண்டங்கள் ஏற்றிச்சென்று வாணிபம் நடத்தினார்கள். இவ்வணிகர்கள் ஆற்றல் மிக்க சபைகளையும் குழுக்களையும் அமைத்துக் கொண்டு அவற்றின் மூலமாக வியாபாரம் செய்துவந்தனர்.இவ்வணிகர்களுக்குள் நாநாதேச திசை ஆயிரத்து ஐநூற்றுவர், மணிக்கிராமத்தார், நகரத்தார், வளஞ்சியார், அஞ்சுவண்ணத்தார், என்ற பல குழுக்கள் இருந்தனர் என்பது சோழர்கால கல்வெட்டுகள் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

**வணிகக் குழுக்கள்**

**மணிக்கிராமத்தார்**

மணிக்கிராமத்தார் என்ற வணிகக்குழுவினர் தலைநகரங்களிலும் கடற்கரை பட்டினங்களிலும் அயல்நாடுகளிலும் வாணிகம் நடத்திய செய்திகள் சோழர்கால கல்வெட்டுகள் மூலம் அறியலாம்,[1] உறையூர் மணிகிராமம், காவிரிப்பூம்பட்டினத்து மணிகிராமம், கொடும்பாளூர் மணிகிராமம, இளங்கோபட்டினத்து மணிகிராமத்தார் என்ற கல்வெட்டுத்தொடர்கள் மணிகிராமத்தார் சிறப்புகளை எடுத்துரைக்கின்றன. அதுமட்டுமல்லாமல் ஸ்தாணுரவியின் கோட்டையம் செப்பேடுகளிலும் நகரங்களில் அக்குழுவினர்க்கிருந்த பெரும் மதிப்பும் அக்குழுவின் உறுப்பினர்கள் மணிக்கிராமத்தார் என்ற பட்டத்தினை அரசிடமிருந்து பெரும் வழக்கம் எழுதப்பட்டுள்ளது. மேலும் திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் உள்ள கல்வெட்டொன்றில் “மணிகிராமத்து தர்மசெட்டி ஆயன சடையன் கவையன் வச்ச விளக்கென்று” அவர்கள் தர்ம செட்டி என்று வழங்கப்பட்டார்கள்,[2] என அறிய முடிகிறது. திருவண்ணமலையிலுள்ள இரு கல்வெட்டுகளில் சத்திய வாசகர் ஆன தன்மவாணியர் என்ற குறிக்கப்பட்டுள்ளனர்.அதாவது உண்மையைச் சொல்லும் நியாயமான வணிகர்கள் என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். அவர்கள் தங்களின் பெயரால் ஒரு மடம் அமைத்துத் திருவண்ணாமலையில் ஆண்டுதோறும் மூன்று திருவிழாக்களுக்கு திருக்கொடி வழங்கிவந்தனர் என்பது இதன்மூலம் புலப்படுகிறது.[3] சோழர்காலத்தினைப் பொறுத்தவரை மணிக்கிராமத்தார் மிகப்பழமை வாய்ந்த வாணிகக் குழுவினர் என்பதும் உள்நாட்டில் மட்டுமல்லாது கடல் கடந்து சென்று, அயல் நாடுகளோடும் வாணிபம் நடத்தினர் என்பதனை நாம் சயாம் தேசத்தில் உள்ள தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது.

**வளஞ்சியர்**

வளஞ்சியர் என்ற வணிகக் குழுவினைப் பற்றி முதலாம் இராசேந்திர சோழன் காலத்திய காட்டூர்க் கல்வெட்டு மூலம் அறியமுடியும்,[4] இவர்கள் வீர வளஞ்சிய சமயத்தை பாதுக்காப்பவர்கள் என்றும், வாசுதேவன், கந்தரி,வீரப்பத்திரன் ஆகிய கடவுளரிடம் தோன்றியவர்கள், துர்க்கையை வழிபடுபவர்கள் என்றும் அக்கல்வெட்டு செய்தி கூறுகிறது. வளஞ்சியருள் பல பிரிவினர் உண்டு.நான்கு திசைகளில் ஆயிரம் வட்டங்கள், பதினெண் நகரங்கள்,முப்பத்திரண்டு வேளிர்புரங்கள் அறுபத்து நான்கு கடிகெத்தானங்கள் ஆகியவற்றிலும் வந்தவர்கள் ஆவர். மேலும் வளஞ்சியர்கள் தென்னிலங்கை வளஞ்சியர்கள் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டிருப்பதால் அவர்கள் ஈழநாட்டு வணிகர்கள் என்றும்

தமிழ்நாட்டில் பல ஊர்களில் தங்கி வாணிபம் நடத்திவந்தனர் என்பது புலனாகிறது. மேலும் அவர்கள் வாணிகம் நடத்திய போது சைவம்,வைணவம்,மற்றைய சமயங்களிடத்தும் பேரன்புடன் நடந்து பல்வேலு அறங்களை செய்து தமிழ்மக்களால் பெரிதும் மதிக்கப்பெற்று வாழ்ந்து வந்தனர். எடுத்துக்காட்டாக, திருக்கண்ணபுரத்தில் ஒரு வைணவ மடம்,நடத்துவதற்கு ஒவ்வொருவரும் இரண்டுகாசு வரிகொடுக்க வேண்டுமென தென்னிலங்கை வளஞ்சியர்கள் தமக்கு ஒரு உடன்படிக்கை செய்துகொண்ட செய்தி அவ்வூர்ச் சௌரிராசப்பெருமாள் கோயிலுள்ள கல்வெட்டொன்றில் காணமுடிகின்றது.[5] இராமநாதபுர மாவட்டம் அருப்புக்கோட்டையில் உள்ள சுந்தரரேஸ்வரர் கோயிலில் உள்ள மூர்த்திகளை தென்னிலங்கை வளஞ்சியருள் ஒருவரான சேவல் சேவகத்தேவன் எழுந்தருளிவந்த செய்தி அக்கோயிலிலுள்ள இரண்டு கல்வெட்டுகள் மூலம் அறியப்படுகின்றது. திருநெல்வேலி வளஞ்சியர்கள் அவ்வூர்க் கோயில் நிலங்களின் மேலாண்மைப்பெற்று அதற்குப்பதிலாக கோயிலில் குறிப்பிட்ட காரியங்களுக்காக சில உதவிகளை செய்துவந்தார்கள். பொ.ஆ.பதின்மூன்றாம் நூற்றாண்டில் நெல்லூர், நாராயணபுரம், ஆர்க்காடு, நெரும்பிறை, பெருங்களார், தமணக்கச்சேரி ஆகிய ஊர்களைச் சேர்ந்த வணிகர்கள் ஒன்று சேர்ந்து ஒரு கிராமம் முழுவதையும் விலைக்கு வாங்கி மதிற்சுவர் கட்டுவதற்குத் திருப்பாசூர் கோயிலுக்குத் தேவதானமாக வழங்கியிருக்கிறார்கள். .வணிகர்களில் இந்த கிராமத்தை தம்மு சித்தி என்பவரின் பொறுப்பில் விட்டு வைத்திருந்தார்கள்.[6] மேலும் திருவிளக்குடி என்ற ஊரில் உள்ள கோயிலின் ஒரு பகுதியை வளஞ்சியர்களும் நானதேசிகளும் இணைந்து கட்டியுள்ளனர். இவற்றினைப் பார்க்கும்போது வளஞ்சியர்கள் தமிழ்நாட்டில் நிலவிய சமயங்களின் மேல் எத்தகைய அன்பும் மதிப்பும் கொண்டிருந்தனர் என்பது அறியமுடிகிறது.

**நகரத்தார்**

நகரத்தார் என்பவர் பெரிய நகரங்களிலிருந்து வாணிபம் நடத்திவந்த குழுவினர் ஆவார். இக்குழுவினர் காஞ்சிபுரம், மாமல்லபுரம், நந்திபுரம், பழையாறை,மயிலாப்பூர் முதலான பல நகரங்களிலும் இருந்ததற்கான சான்றுகள் கல்வெட்டுகள் வாயிலாக தெரிந்து கொள்ளலாம். இவர்கள் சிறப்புகளை பார்க்கும் போது தம் வணிகத்தொழிலைத் திறமையாக நடத்திக்கொண்டும்,நகர ஆட்சியினை பொறுப்பினை ஏற்றும் பொதுமக்களுக்கு சிறந்த தொண்டுகள் புரிந்து வந்தனர்.[7] இவர்கள் உள்ளூரில் வணிகம் செய்து வந்தமையால், இக்குழுக்கும் மற்ற குழுக்களான மணிக்கிராமம்,நானாதேசிகள்,வளஞ்சியர் ஆகியோர்களுக்கும் இடையே எத்தகைய உறவு இருந்தது என்பது பற்றித் தெளிவாக அறியமுடியவில்லை.

**அஞ்சு வண்ணத்தார்**

சோழர்கள் காலத்தில் வாணிகம் நடத்திவந்த குழுவினருள் அஞ்சு வண்ணத்தார் என்ற ஒரு வகை குழுவினர் பற்றி முதல் ஆதித்த சோழன் காலத்திலிருந்த சேரமான் தாணுரவியின் ஆட்சிகாலத்திலும், முதல் இராஜேந்திரசோழன் காலத்திலிருந்த சேரமான் பாஸ்கர ரவிவர்மன் ஆட்சி காலத்திலும் பொறிக்கப்பட்ட செப்பேடுகள் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது. ஆனாலும் இச்செப்பேடுகளில் செய்திகள் குறித்து முரண்பட்டக் கருத்து வேறுபாடுகள் உண்டு. இவர் சேர நாட்டு யூதர்கள் என்று டாக்டர் குண்டர்ட், டாக்டர் பர்னல் என்ற அறிஞர் கருதுகின்றனர். கல்வெட்டிலாகாவின் தலைவராயிருந்த அறிஞர் வெங்கையா என்பவர் அஞ்சுவண்ணத்தார் என்பவர்கள் தன்னாட்சி பெற்று வாழ்ந்த வணிகக்குழுவினர் என்று குறிப்பிடுகிறார். பல்சந்தமாலை என்ற பழைய நூல்களிலுள்ள சிலப்பாடல்கள் இவர்கள் யார்? என்று கூறுகின்றது. அந்நூல் முழுவதும் இப்போது கிடைக்கவில்லை எனினும் கிடைத்துள்ள சில பாடல்களில் பாடல்களில் "இயவனராசன் கழுபதிதாமுதலெண்ண வந்தோர் அயன்மிகு தாணையர் அஞ்சுவண்ணத்தவர்", என்றும் " ஏழ்பெருந்தேரங்கத் தியனவர்கள்- அல்லா என வந்து "என்று காணப்படும் தொடர்களலால் அஞ்சு வண்ணத்தார் முகமதியராயிருந்தல் வேண்டும் என்பது புலனாகிறது. மேலும் சில பாடல்களிலும் இச்செய்தி

உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் கீழ்கடற்கரைப் பகுதியில் உள்ள தீர்த்தாண்ட தான புரத்திலும் இக்குழுவினர் இருந்தனர் என்பது அவ்வூர்க் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.[8] களவியற் காரிகை என்ற நூலில் “கலைமதி வாய்மைக் கலுல்பா வழிவருங் கற்பமைத்த தலைமையர் ஏழ் பெருந் தேரங்கமும் பெற்றவர் என்ற பாலில் இவர்கள் பழைய துருக்கிவேந்தனாகிய “ காலிப்” வழியில் வந்தவர்கள் என்று நன்கு அறியப்படுகிறது. எனவே அஞ்சுவண்ணத்தார் முகமது மரபினர் என்றும் சோழர் காலத்தில் தமிழகத்தில் தங்கி வாணிபம் நடத்தி பொருளீட்டிப் புகழுடன் வாழ்ந்த குழுவினர் என்பது தெளிவாகிறது.

**நானா தேசிகள் அல்லது நானா தேச திசை ஆயிரத்து ஐநூற்றுவர்**

சோழர்கால வணிகக்குழுக்களுள் மிகவும் புகழ் பெற்று விளங்கியவர் நானா தேச திசை ஆயிரத்து ஐநூற்றுவர் ஆவார். இவ்வணிகக் குழுவின் பெயரை இரண்டு வகையாக விளக்கலாம் எல்லா நாடுகளிலுமான ஆயிரம் திக்குகளுக்கு சென்ற ஐநூற்று வணிகர் என்பது ஒரு பொருள் எல்லா நாடுகளிலிருந்தும் வந்து பல திக்குகளில் பெற்ற ஆயிரத்து ஐநூறு பேர் என்பது மற்றொரு பொருள். எதுவாயினும் முதலில் கூறப்பட்ட பொருளினையே வைத்தே இவர்கள் அறியப்படுகிறார்கள். இக்குழுவுக்கு நீண்ட வரலாறும் சாதனைப் பட்டியலும் உண்டு.[9]

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டத்தில் முனிசந்தை என்ற இடத்திலுள்ள இரு சிறு கல்வெட்டுகளில் இக்குழு அக்காலத்திலிருந்து நன்கு நிலைபெற்று செயல்பட்டது என்றும் அக்குழுவின் பெயரால் முனிசந்தையில் ஒரு குளம் வெட்டப்பட்டு அக்குளத்தை அடிக்கடி செப்பனிடுவதற்கு மூலதானத்தை எடுத்து வைக்க கட்டளை ஏற்படுத்தப்பட்டதை குறிப்பிட்டுள்ளனர்.[10] பொ.ஆ.1015 அளவில் நிகரிலி சோழ-சதுர்வேதி மங்கலம் என்ற ஊர்ச்சபை குடியிருக்கவும் வியாபாரப் பண்டங்களை வைத்திருப்பதற்காகவும் இவ்வகை குழுவின் உறுப்பினர்களுக்குச் சில வீடுகளை வழங்கியிருக்கிறது. மேலும் திருநெல்வேலி அம்பாசமுத்திரத்திலுள்ள சிவன் ஒரு கட்டளை ஏற்படுத்த ஒரு நிலம் வழங்கப்பட்ட செய்தி பொ.ஆ 1033-ல் அங்குள்ள கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.[11]

புதுகோட்டை மாவட்டத்தில் தொல்லியல் ஆய்வுக் கழகத்தினரால் படிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் பற்றியும், அக்குழுவின் கூட்டுறவு வணிகத்தின் பெருமைப் பறைசாற்றியும் பொறிக்கப்பட்டுள்ளது. ஐந்து அடி உயரமுள்ள ஒரு கல் தூணின் நான்கு புறமும் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டு 83 வரிகளுடன் அமைந்த தூண் கல்வெட்டாகும். இக்கல்வெட்டின் தொடக்கத்தில் சங்கு, செங்கோல், அரிவாள், குத்துவிளக்கு ஆகிய சின்னங்கள் கோட்டுருவமாக செதுக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கல்வெட்டுத் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர்க்கு உரித்தான “ஸமய்த புவநாத” என்ற மெய்கீர்த்தித் தொடருடன் தொடங்குவது மிக சிறப்பு வாய்ந்ததாக இருக்கிறது.[12]

இந்த கல்வெட்டில் நிலவைத் தொடும் உயரத்தில் அமைந்த கட்டிடங்கள் பட்டணங்கள், துறைமுகங்கள், வேளாண்நகரங்கள், காவல் வசதிகளுடன் செயல்பட்ட வணிகப்பொருட்களுக்கான கிடங்குகள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. மைசூர் பகுதியிலுள்ள சில கல்வெட்டுகளில் இந்த குழுவின் தோற்றம் அமைப்பு, இவர்களின் நம்பிக்கைகள் பற்றி குற்ப்பிடப்பட்டுள்ளது.[13] இவர்கள் விற்பனை செய்த பொருட்கள் வாணிபத் தொடர்புகொண்டிருந்த நாடுகள், பயன்படுத்திய போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவை எல்லாம் பட்டியல் போட்டு தரப்பட்டுள்ளது.

**நானா தேசிகளின் சிறப்புகள்**

நானா தேசிகள் நிலம் வழியாகவும் நீர் வழியாகவும் உலகெங்கும் சென்று வணிகம் செய்தவர்கள். நன்கு பழக்கப்பட்ட யானைகள், உயர் ஜாதி குதிரைகள், எல்லா வகையான நவமணிகள், பவழங்கள், இரத்தினங்கள், நறுமணப்பொருட்கள், மிளகு கிராம்பு, இலவங்கப்பட்டை, சூலம் போன்ற மலைகளில் விளையும் பொருள்கள் சிவப்பு நிறத்தில்

அலங்கார சேணம் வைத்து, எருமைகள் மீதும், கழுதைகள் மீதும் இவர்கள் தங்கள் விற்பனை பொருட்களை எடுத்துச் சென்றனர். சிராவல்லி என்ற கிராமத்தை "நானா தேசிய தசமடி- ஏரி வீரப்பட்டினர் "என்று பெயரிட்டு, அவ்வூர்க் குடிமக்களுக்கு சில உரிமைகளும் வழங்கினர் என்று முதலாம் இராசதிராச சோழன் ஆட்சிக்காலத்து கல்வெட்டு செய்தி உணர்த்துகின்றது.

இவற்றினைப் பார்க்கும்போது நானாதேசிகள் செல்வாக்கும் தன்னாட்சி பெற்று, அரசியல் எல்லைகளையெல்லாம் கடந்து வியாபாரம் செய்து வந்துள்ளனர் என்பது தெரிய வருகிறது.[14] சோழநாட்டின் பேரரசு முதல் உள்ளூர் அமைப்புகள் வரை, எல்லா ஸ்தாபனங்களும் இந்தக் குழுவினை அங்கீகரித்தன. தங்களுடைய பண்டகச் சாலையில் இருந்த பொருட்களையும் பாதுகாத்துக்கொள்ள படைவீரர்களை வைத்துக்கொண்டிருந்தார்கள். இதற்கான உரிமை அரசால் வழங்கப்பட்டிருந்தது. இதில் வணிகர்களை பாதுகாப்பதற்காகப் பெருவழிகளில் நிறுத்தி வைக்கப்பட்ட யானைப் படையின் தலைவர் அத்தி கோசத்தார் எனப்பட்டனர். காலாட்படை தலைவரின் குழு வீரகோசம் என்று பெயர் பெற்றிருந்தது.[15]

நானாதேசிகள் தாங்கள் வியாபாரம் செய்த இடங்களில் உள்ளூர் ஆட்சியிலும் அக்கறை காட்டிவந்தார்கள். இவர்கள் வணிகம் செய்த நாடுகளின் அரசர்கள் தங்களுக்குள் போர் செய்வதையும் கூடப் பொருட்படுத்தாமல் தங்கள் வியாபாரத்தைக் கவனித்து அதில் வெற்றிகண்டு வளம் அடைந்தனர். பதின்மூன்றாம் நூற்றாண்டில் பர்மாவில் பாகனி என்ற ஊரில், நானா தேதிகள் ஒரு பெருமாள் கோயிலைக் கட்டினர் என்றும், கேரளத்தில் உள்ள துறைமுக நகரைச் சேர்ந்த ஒரு வணிகக்குழுவினர் அக்கோயிலுக்கு நன்கொடைகள் கொடுத்துள்ளனர் என்று அங்குள்ள கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வணிகக் குழுவினர் பற்றிய தனிப்பட்ட கல்வெட்டுகள்**

வணிகக்குழுக்களின், உலக வணிகத் தொடர்பு, இவர்கள் கோயில்களுக்கும் மற்றும் பிற நற்காரியங்களுக்கும் அளிந்த கொடைகள் பற்றி எல்லாம் கல்வெட்டில் பொறிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். அரசர்களுக்கு இணையாகத் தங்களுக்கான வணிகச்சின்னங்களையும் மெய்க்கீர்த்திகளையும் கூட தங்கள் கல்வெட்டுகளில் பொறித்தனர். இவற்றினுள் பல்வேறு வணிகக் குழுவினர் பொறித்த 314 கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன. அதில் தமிழகத்தில் 118 கல்வெட்டுகளும், கர்நாடகாவில் 132, ஆந்திராவில் 35, மகாரா'ட்டிராவில் 2, கேரளத்தில் 8, தென்கிழக்காசிய நாடுகளான,சுமத்ரா, தாய்லாந்து, மியான்மரில் 4 கல்வெட்டுகளும், இலங்கையில் 15 கல்வெட்டுகளும் கண்டறியப்பட்டுள்ளன. சீனா நாட்டில் நானாதேசிகள் பல்வேறு பகுதியிலும் வணிகம் செய்துள்ளனர் என்பதற்கு பல ஆதாரங்கள் கிடைத்துள்ளன.[16]

**முடிவுரை**

இத்தகைய வணிகக் குழுவினர் எல்லாம், தனித்தனி குழுவினர் என்றாலும், அவர்கள் ஒருவருக்கொருவர் முரண்படாமல் வணிகத்தை நடத்திப் பொருளீட்டிப் புகழுடன் வாழ்ந்து வந்தனர் என்பது புலனாகிறது. பேரரசர் முதலாம் இராசராச சோழன்இ முதலாம் இராஜேந்திர சோழன் ஆகியோர்களின் ஆட்சியில் வணிகர் குழுவினரின் கடல் வணிகத்தைக் காப்பதறகாகவே தென்கிழக்கு ஆசிய நாடுகள் மீது பல படையெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டனர். இவ்வணிகக் குழுக்கள் மிகவும் சக்தி வாய்ந்தவைகளாக விளங்கிய மட்டுமல்லாமல் அவை அரசர்களிடமும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தன. இந்த வணிகப் குழுவினரிடமிருந்து பெற்ற பயன் காரணமாக அரசர்கள் தங்களால் இயன்ற சலுகைகளையும் இக்குழுவினருக்கு அளித்து அவர்களை ஆதரித்தனர். நாணய சாலைகளுக்கான பொன் வெள்ளி மற்றும் உலோகங்கள் இவ்வணிகர்கள் மூலமாகவே சில அரசுகளுக்குக் கிடைத்தன, இவர் சார்பற்ற குழுக்களாக இயங்குவதற்கு அரசர்கள் அதரவு அளித்திருந்தனர் இத்தகைய

செல்வாக்கும் தன்னாட்சியும் பெற்று வணிகம் செய்தனர் என்பது இதன் மூலம் அறிய முடிகிறது.

**மேற்கோள்கள்**


1. T.V. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் சரித்திரம், ராமையா பதிப்பகம், சென்னை-14 ப.90.
2. Ep.Rep.47/1888
3. Ep Rep 547/1902:550.∴1902
4. Ep Graphy Report.256/12
5. Ep Rep.25/1927
6. Ep Rep.120/1930
7. கே.கே.பிள்ளை, தமிழகவரலாறு மக்களும் பண்பாடும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை- 13.ப.327.
8. Travancore Archaeological Services, Vo1.111.NO 34 Verse,73
9. திசையாயிரத்து ஐநூற்றுவர் கல்வெட்டு, தினமணி, செப்டம்பர் 19.2018.
10. திரிஜ்டிஸ்கிரிப்ட் 'ர் இண்ட் டால்- லாண்ட் எண் வோல்கண்குண்ட டீல், IXXIV,1934, ப.614-8.
11. Ep Rep 82/1907.
12. A rare Thisaiyaarathu Ainootruvar inscription stone pillar of 11th century BC is found near sellukudi,pudukottai (Dt),Taminadu, October-2,2018.
13. இ.க.IV .Hg7:VII SK 118
14. கே.ஏ நீலகண்ட சாஸ்திரி, சோழர்கள், இந்தியன் கவுன்ஸில் ஆப் ஹிஸ்டாரிகல் ரிசர்ச், நியூ டெல்லி ப.779.
15. வணிகக் குழுவினரின் பாதுகாப்பு வீரர்கள் "அறூநூற்றுவர்" கல்வெட்டு கண்டெடுப்பு, தி இந்து 06 டிசம்பர் 2017
16. சோழர் கால வணிகக்குழு கல்வெட்டு கண்டெடுப்பு தினமணி 17ஆகஸ்ட் - 2017.